## தனிப்பட்ட, குடும்ப பிரச்சினைகளுக்காக குழந்தைகளுக்கு ஆலோசனை கூறுதல்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே! யோசேப்பு நடத்தியது போல குழந்தைகள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை நடத்த அவர்களுக்கு உதவி செய்யும்!"

இந்தப் பாடங்களில் இருந்து தற்போதையை தேவைகளுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளவும்.

யோசேப்பை எகிப்துக்கு எடுத்துச் சென்ற பயணிகளின் இந்த ஒட்டக அணிவகுப்பை குழந்தைகள் வரையலாம்.



ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ இஸ்ரவேல் கோத்திரத்தின் முற்பிதாக்களான யோசேப்பையும் அவன் சகோதரர்களையும் பற்றி கதையைச் சுருக்கமாகக் கூறலாம் (ஆதி அதி.37 & 39-46).

- யோசேப்புக்கு அவனது தந்தையாகிய இஸ்ரவேல் ஒரு பல்வண்ணமான மேலங்கியை கொடுத்ததால் அவனது சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டனர் (இந்த யோசேப்பு மரியாளின் கணவன் அல்ல).
- தாங்கள் யோசேப்பை வணங்குவதாக அவன் கண்ட கனவின் நிமித்தமாக அவனை அவர்கள் வெறுத்தனர்.
- அவர்கள் அவனைக் கொல்ல சதி செய்தனர். பின் அதற்குப் பதிலாக அந்நியர்களிடம் அவனை அடிமையாக விற்றுப் போட்டனர்.
- எகிப்து மன்னனுக்கு அரசாங்க அதிகாரியாக இருந்த போத்திபார் அவனை விலைக்கு வாங்கினான். யோசேப்பு ஞானமாக அவனுக்கு சேவை செய்தான்.
- பல பின்னடைவுகளுக்கும், அநீதிகளுக்கும் பின்னர் யோசேப்பு எகிப்து மன்னனான பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் அமர்ந்து ஆட்சி செய்யும் அளவுக்கு உயர்ந்தான்.
- ஒரு பஞ்சத்தின் போது அவனது சகோதரர்கள் தானியம் வாங்க அவனிடம் வருகின்றனர். ஆனால் அவனை அவர்களுக்கு அடையாளம் தெரியவில்லை.
- அவன் அவர்களது பணத்தைத் திரும்பக் கொடுத்து, அவர்களது இளைய சகோதரனை அழைத்து வராமல் மறுபடியும் தன்னைப் பார்க்கக் கூடாது என்று கூறுகிறான்.

இளைய சகோதரனான பென்யமீனை அழைத்துக்கொண்டு அவனது சகோதரர்கள் எகிப்துக்கு வந்த போது யோசேப்பு என்ன செய்தான் என்ற இந்தக் கதையின் கடைசிப் பகுதியை ஆதி. 44, 45:1-15 ல் இருந்து கூறலாம் அல்லது நடித்துக் காட்டலாம்.

**கேள்விகள்:** கதையைக் கூறிய பிறகு இந்தக் கேள்விகளைக் கேட்கவும் :

பென்யமீனின் தானியப் பையில் எதைப் போடும்படி யோசேப்பு தன் வேலைக்காரனிடம் கூறினான். (ஆதி 44:2).

வெள்ளிக் கோப்பையைத் திருடியவனுக்கு விதிக்கப்படுவதாக இருந்த தண்டனை என்ன (ஆதி. 44:10).

யோசேப்பை கைவிட்டது போல சகோதரர்கள் பென்யமீனைக் கைவிட்டனரா? (இல்லை, ஆதி 44:33).

சகோதரர்கள் தாங்கள் செய்தது குறித்து வருத்தம் அடைந்தார்களா (ஆம், ஆதி 44:34).

தன்னுடைய சகோதரர்களோடு பேசிக்கொண்டிருந்த போது யோசேப்பின் மன நிலை எப்படி இருந்தது (ஆதி. 45:2).

யோசேப்பு தன் சகோதரர்களை மன்னித்தானா (ஆதி. 45:15-16).

யோசேப்பும் அவனது சகோதரர்களும் பற்றிய கதையின் பகுதிகளை **நாடகமாக்கலாம்.** இந்த நாடகத்தை அரங்கேற்ற சபையின் ஆராதனை தலைவரோடு கலந்து பேசி ஏற்பாடு செய்யவும்.

**ஒரு பெரிய பிள்ளையோ** அல்லது பெரியவர் ஒருவரோ கதை கூறுபவராகவும் யூதா, வேலைக்காரன், யோசேப்பாக நடிக்கலாம். சிறுவர்கள் பென்யமீனாகவும் மற்ற சகோதரர்களாகவும் நடிக்கலாம். சகோதரர்கள் தானியம் வாங்க பைகளை வைத்திருக்கின்றனர்.

**கதை கூறுபவர்:** ஆதி 44:1-13 வரை உள்ள கதையின் முதல் பகுதியைக் கூறவும். பின், “இப்போது, யோசேப்பு தன் வேலைக்காரனிடம் என்ன சொல்கிறான் என்பதைக் கேட்போம்.”

**யோசேப்பு:** “இந்தக் கோப்பையை இவர்களுடைய சிறிய சகோதரன் பையில் இரகசியமாகப் போட்டு விடு”

**வேலைக்காரன்:** பென்யமீனின் பைக்குள் கோப்பையை மறைத்து வைக்கிறான்.

**சகோதரர்கள்:** (நடந்து கொண்டே) “கடவுளுக்கு நன்றி! அந்த எகிப்தியன் நமது குடும்பங்களுக்கு தானியம் கொண்டு போக அனுமதித்தானே.”

**வேலைக்காரன்:** (ஓடி வந்து பென்யமீனின் பையை சோதனையிட்டு) “என்னுடைய எஜமானனின் கோப்பையை நீ திருடிவிட்டாய். இதோ உன் சாக்குப் பையில் இது இருக்கிறது பார்! இதற்கு தண்டனையாக நீ எங்களுக்கு அடிமையாக இருப்பாய்!”

**சகோரர்கள்:** வருத்தத்தோடு திரும்பிப் போகிறார்கள். “நாம் இனிமேல் அடிமைகளாக இருப்போம். நாம் யோசேப்புக்கு செய்ததற்கு பிரதிபலனைாக தேவன் நம்மைத் தண்டிக்கிறார்”.

**கதைகூறுபவர்:** ஆதி 44:14-34 லிருந்து வரும் கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். “ இப்போது யூதா யோசேப்பிடம் என்ன கூறுகிறான் என்று கேட்போம்.”

**யோசேப்பு:** “நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன் நீங்கள் எனக்குச் செய்த தீமையில் இருந்து தேவன் உங்களுக்கு நன்மையைக் கொண்டு வந்தார். உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஆதரவாக இருக்கவே தேவன் என்னை இங்கு கொண்டு வந்தார். நான் எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன்.”

**கதை கூறுபவர்:** இந்த நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

**கேள்விகள் கேட்கவும்:** பெரியவர்களுக்கு இதை சிறுவர்கள் நாடகமாக நடித்துக் காட்டினால் மேலே பட்டியலிடப்பட்ட கேள்விகளையும் அவர்கள் பெரியவர்களிடம் கேட்கலாம்.

- ஒரு சிறிய தாளில் குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக் கொருவர் மனம் வருந்தும் படி செய்கின்ற காரியங்களை எழுதவும்.
- இந்த காகிதத் துண்டை ஒரு கப்பில் போட்டு, அந்த மோசமான விஷயங்களை மன்னிக்கும்படி தேவனை வேண்டுக. அந்த காகிதங்களை மண்ணில் கொட்டி நாம் எவ்வாறு எல்லாவற்றையும் தேவனுக்கு கொடுத்து விடுகிறோம் என்று காட்டலாம்.
- நம்மைத் துன்புறுத்துபவர்களை மன்னிக்கவும், நேசிக்கவும் உதவி செய்யுமாறு மறுபடியும் தேவனை வேண்டிக் கொள்க.

ï **படம்:** பிள்ளைகள் பார்த்து வரைய ஒரு சாக்குப்பையின் படத்தை வரையவும். அவர்கள் இதை பெற்றோருக்கோ, அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கோ காட்டலாம். அது நாம் நமது குடும்ப உறுப்பினர்களை மன்னித்து அவர்களுக்கு எதிரான மனத்தாங்கல்களை ஒதுக்கித் தள்ளும்படி உணர்த்துகிறது. நாம் அந்த சாக்கில் நமது மனத்தாங்கல்களை போட்டு கடவுளிடம் கொடுத்துவிடுகிறோம். அவர் நமது பாவங்களை முற்றிலுமாக அகற்றிப்போடுகிறார்.

**விவாதம்:** கடந்த காலத்தில் நமது குடும்ப அங்கத்தினர்கள் செய்த காரியத்தால் நமது மனம் புண்பட்டிருக்கலாம். அவற்றை நாம் மன்னிக்க வேண்டும். இதை உதாரணங்களோடு விளக்கலாம்.



**குழந்தைகளின் தனிப்பட்ட பிரச்சினைகளை அணுகி சரிசெய்தல்:**

யாராவது குழந்தைகளுக்கு பிரச்சினைகள் இருந்தால், குழுவில் இருந்து தனியாக அழைத்து அவர்களோடு நேரம் ஒதுக்க வேண்டும்.

பிரச்சினையின் அடிப்படையை அறிந்துகொள்ள நன்கு கவனித்துக் கேட்க வேண்டும். உதவிக்காக ஜெபிக்கவும்.

முதலில் அவர்கள் மேலோட்டமான குற்றச் சாட்டைக் கூறுவார்கள். அதை விட்டுவிட்டு அடிப்படையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

பிரச்சினையை அந்தந்த நிலைக்குத் தகுந்தவாறு அணுக வேண்டும். தேவைப்பட்டால் பெற்றோருடன் பேசலாம்.

பிரச்சினைகளின் அறிகுறிகளை விட்டுவிட்டு அதன் அடிப்படையை தேவ வார்த்தையை உபயோகித்து அலச வேண்டும்.

குழந்தைகள் தங்கள் நடத்தைகளை மாற்ற எளிதான சிறுசிறு அடிகளை எடுத்து வைக்கட்டும்.

மோசமான உணர்வுகளால் சில குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனவா என கவனிக்க வேண்டும். தங்களைப் பற்றியே சிலர் மோசமாக எண்ணலாம். அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை அவர்களுக்கு உறுதி செய்ய வேண்டும். தேவன் அவர்களை மன்னிக்கிறார் நேசிக்கிறார் என்பதை உறுதியாகக் கூறவேண்டும்.

கவனத்தைக் கவரவே சில குழந்தைகள் மோசமாக நடந்து கொள்ளும். அவர்களுக்கு, தங்கள் பெற்றோருக்கும், பிற குழந்தைகளுக்கும் உதவிகள் செய்யும்படி கடமைகளைக் கொடுக்கவும். அவர்கள் செய்வதைப் பாராட்டிப் பேசுங்கள்.

**பெரிய பிள்ளைகள்** சிறிய பிள்ளைகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளில் ஈடுபடட்டும். பெரிய பிள்ளைகள் சிறிய பிள்ளைகளுக்கு பெரிய சகோதரர்களைப் போல உதவி செய்து வழிகாட்டட்டும்.

**ஒப்புவித்தல்:** ஐந்து பிள்ளைகள் ஒவ்வொருவராக பிலி 2:5-9 ஐ ஒப்புவிக்கட்டும்.

குடும்ப அங்கத்தினர்களை மன்னிப்பதைக் குறித்து **பெரிய பிள்ளைகள்** பாடல்கள், கவிதைகள் அல்லது நாடகங்களை எழுதட்டும்.

எபேசியா 4:32 ஐ **மனப்பாடம்** செய்க. ஜெபம். “கர்த்தாவே எங்கள் குடும்பங்களில் எங்கள் மனதை காயப்படுத்துபவர்களை மன்னிப்பது கடினமாக உள்ளது. மன்னிக்க எங்களுக்கு உதவி செய்யும்.”

இதுவரை நீங்கள் பிள்ளைகளின் ஆசிரியர்களுக்கான வழிகாட்டுதல் Aob ஐ படிக்கவில்லை என்றால் உடனே படிக்கவும்.

Copyright © 2003 by Paul-Timothy. Download Paul-Timothy studies freely from www.Paul-Timothy.net